செந்தமிழ்ச் செல்வி 1925-26

சிலம்பு 16 பரல் 1

1921-25

வை / 7.1

ZL

R\ ... , N11VD

N25·16·1.

186754

Regd: No. M. 916.

THE VEDANTA DIPIKA

வேதாந்த திபிகை.

குரோதனஹ,
1925—1926.
ஸம்புடம் 16.

ஐப்பசிமீ.
OCTOBER.
ஸஞ்சிகை 1.

பத்ராதிபர். }
கார்யதர்சி. } ர. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார், எம்.ஏ.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
11 NOV 1925

விஷய ஸூசிகை.

1. விஜ்ஞாபனம்:—கார்யதர்சி.
2. பத்ராதிபரின் குறிப்புகள்:—பெரியபெருமாள் கோவிலில் ஓர் சிலாசாஸனம்; பரகாலமடம். 1
3. அர்ச்சாவதார வைபவம்:—
ஸ்ரீ. உப. சிங்கப்பெருமாள் ஸ்வாமி, காரப்பங்காடு. 14
4. கடிதங்கள்:—ஸ்தானம் பாஷ்யபட்டாசாரியர். 18
5. உபவாஸத்தின்குணம்:—ஸ்ரீ. உப. ராஜகே. பாலாசார்யர். 19
6. ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம்:—
ஸ்ரீ. உப. தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர். 22
9. ஸ்ரீபரமபத ஸோபாநம் (வ்யாக்யானத்துடன்):—
ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்ஹமாசார்யர். 56
10. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை (தமிழ்மொழி பெயர்ப்புடன்)—
ஸ்ரீ. உப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்ஹமாசார்யர். 169

Office:—2/11, Adiappa Mudaly Street, Purasawalkam.
K. R. Press, Madras.

வருஷச் சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 4

உலக ப்ரஸித்தி பெற்றது.

"டிக் - டாக்" | கடியாரம் விலை, | ரூ. 3.

ஜெர்மனி தேசத்தில் செய்யப்பட்டது. மிக்க அழகாயுள்ளது. சுவற்றில் மாட்டக்கூடியது. காலத்திற்குச் சரியான மணியைக் காட்டக்கூடியது. விலை குறைவு. பலமதிகம். இன்றைக்கே எழுதுங்கள்.

"டிக் - டாக்"

கடியாரம் 1 - க்கு விலை ரூ. 3.

(ரிஜிஸ்டர்ட்)

விலாசம்:— பீடர் வாச் கம்பெனி,
தபால் பெட்டி நெ. 27.
மதராஸ்.

ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதய மஹோத்ஸவம்.

மைலாப்பூர் வேதபாராயணஸபைக்கு பிரஸிடெண்டான கனம் ஜஸ்டிஸ் ஸ்ரீ. உ. வ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ஸ்வாமி இரண்டு வருஷங்களுக்குமுன் ஒருநாள் விடியற்காலத்தில் ஒரு பரமைகாந்தி எழுந்தருளி ஸ்ரீதேசிகனுடைய உத்ஸவங்களை வடை பாணவேடிக்கைகளுடன் மட்டும்செய்வதைக்காட்டிலும் அவருடைய க்ரந்தங்களின் விஷயத்தை ப்ரவசனமும் செய்வது ஸகலஜனங்களுக்கும் அவரிடம் பக்தியை அதிகரிக்கும் என்று சொன்னதுபோல் ஸ்வப்நம்கண்டாராம். அதுமுதல் அதை ஸ்ரீபகவானுடைய நியமனம் என்று எண்ணி அந்த ஆஜ்ஞையை நிறைவேற்ற வேண்டுமென்று ப்ரயத்னம்செய்து வருகையில் பரதேவதா ஸ்வரூபத்தை நிச்சயமாய் நமக்கு 'இருக்கண்டேன்' என்று காட்டிக்கொடுத்த பரமோதாரரான ஸ்ரீபேயாழ்வார் உத்ஸவத்தில் ஸ்ரீதேசிகனுடைய திருநக்ஷத்திர தினம் பகவானுடைய ஸங்கல்பமான ஸூர்யோதயத்தால் நம்முடைய ஸம்ஸாரமாகிற ராத்ரி நசித்து மோக்ஷஸாம்ராஜ்யம் ஏற்படும் என்ற தத்வத்தை பண்டிதாள் முதல் பாமராள்வரையில் எளிதில் அறிந்து இனிநாம் தத்வத்தை அறிந்து ஹிதத்தை அனுஷ்டித்து, புருஷார்த்தத்தை அடையவேண்டிய முயற்சிகளைசெய்ய உத்யுக்தர்களாகும்படி ப்ரேரணை செய்யக்கூடிய க்ரந்தமான ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயத்தின் ப்ரவசனம் மிகவும் பொருத்தமுள்ளதாதலால் அதற்கு சென்ற ச்ரவணத்தன்று ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயத்தின் ஸாராம்சத்தை எல்லாருக்கும் ரஞ்ஜிக்கும்படி ஒரு உபந்யாஸத்தை செய்யும்படி செய்து, அந்த ஸ்ரீகோசத்தை ஒரு பல்லக்கில் எழுந்தருளப்பண்ணி ஸ்ரீபேயாழ்வார், ஸ்ரீதேசிகனுடன் அந்த ஸ்ரீகோசத்துக்கும் ஊர்வலம் உத்ஸவம் கண்டருளப்பண்ணப்பட்டது. ஜஸ்டிஸ் ஸ்வாமி தன்னுடைய மனோரதத்தை ஸபிகர்களுக்குத் தெரிவித்து ஸ்ரீ. உ. வே. பண்டிதபூஷணம் ஸ்வாமியை உபந்யஸிக்கும்படி வேண்டிகொண்டார், அவ்விதமே அந்தஸ்வாமியும் ச்ரோதாக்கள் ஆனந்தபாஷ்பம் சொரியும்படி அம்ருத வர்ஷமான ஒரு உபந்யாஸத்தைச் செய்தார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 NOV 1925
MADRAS

வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்
கார்யநர்சி } ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.

ஸம்புடம் 16.] க்ரோதனஹு, ஐப்பசிமீ. [ஸஞ்சிகை 1

" புருஷஸ்வபா⁴வவிஹிதாந் யதா²வர்ணம் யதா²ஶ்ரமம் ।
வைராக்³யராகோ³பாதி⁴ப்⁴யாமாம்நாதோப⁴யலக்ஷணாந் ॥ "

[ஸ்ரீபாகவதம் - 1-9-26.]

விஜ்ஞாபனம்.

சென்ற புரட்டாசியுடன் தீபிகையின் 15-வது வயது நிறைந்து இந்த ஐப்பசிமீ முதல் 16-வது வயது ஆரம்பித்துவிட்டது. இந்தப் பதினைந்து வருஷங்களாக ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸித்தாந்தத்தைப் பரவச்செய்து நம்முடைய மதத்தினுடையவும் ஆசாரத்தினுடையவும் ஸூக்ஷ்மாம்சங்களை ஸுலபமாய் எல்லோருக்கும் எடுத்துக்காட்டி தன்னுடைய கடமையை ஸரிவர நிறைவேற்றி வந்துகொண்டிருக்கிறது. இரண்டு மூன்று வருஷகாலமாக நமது ஸமூஹத்துக்கே ஆஸ்திக்யம் வ்ருத்தியடைந்து நம் ஸ்வாமிகளுக்கு ச்ரத்தை யுண்டாகி இருக்கிறதென்பது தீபிகாபிமானிகள் வர வ்ருத்தியடைவதிலிருந்து வ்யக்தமாக ஏற்படுகிறது. ஆனால் தமிழ் ஜில்லாக்களுடைய விஸ்தீர்ணத்தையும் அதிலிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஸங்க்யையும் கவனித்தால் தத்காலம் தீபிகாபிமானிகள் 750 என்பது ஸமுத்திரத்தில் பெருங்காயம் கரைத்ததற்கு ஸமானமே. பலதட்வைகளில் ஒவ்வொரு மெம்பரும் புதிதாக ஒருவரையாவது சேர்த்துக்கொடுக்கிறதென்ற அபிஸந்திகொண்டால் தீபிகை நிரம்பவும் முன்னுக்கு வந்துவிடும் என்று ப்ரார்த்தித்தும் இரண்டொரு மகான்கள் தவிர மற்றவர்கள் காதில் படவில்லை. மடாதிபதிகள் ஒவ்வொருவரையும் நூறு காபிகளை எடுத்துக்கொண்டு உபகரிக்கும்படி ப்ரார்த்தித்தும் அவர்கள் திருவுள்ளத்

திலும் படவேயில்லே. எப்பொழுது எம்பெருமான் அவர்கள் திருவுள்ளத்தில் படும்படி செய்வாரோ தெரியவில்லே.

தத்காலம் பண்டிதர்கள் விஷய தானத்தாலும் மற்றவர்கள் தீபிகையை வாங்குவதாலும் உபகரித்தார்களாகில் நம்முடைய ஸமூகத்திற்கு வேண்டிய அநேக நல்ல கார்யங்களை ஸாதித்துக்கொள்ளலாம். பெரிய பண்டிதர்களான பரமைகாந்திகள் விஷய ப்ரதானம் செய்வதில் இஷ்டமே இல்லாமலிருக்கிறார்கள். இதுவும் தீபிகை செய்த பாபம்தான். நம்ஸமூகத்தாருக்கு தேசாபிமானம்போல் மதாபிமானமும் இருந்தால் அல்லவோ நாம் முன்னுக்கு வருவோம். மேல்நாட்டுக்கல்வியின் பலனாக நம்மவர்கள் ஒவ்வொருநாளும் மதாபிமானத்தை இழந்து வருகிறார்கள். இவர்களுக்கு பகவான்தான் புத்தியில் உதித்து மதத்தில் அபிமானத்தை உண்டாக்கவேண்டும். ஐஹிகப்ராயமான இந்நாளில் மதமும் ஆசாரமும் நிலைநின்று இருக்கிறது நம்முடைய ஸ்திரீகளாலேயே. அவர்களால்தான் மதமும் ஆசாரமும் சீர்கெடாமலிருக்கின்றன. ஆனால் வரவர அவர்களும் புராண இதிஹாஸங்களை வாசிப்பதை விட்டுவிட்டு புத்தியைக் கலைக்கும் நாவல்களைக் கைப்பற்றிவருகிறார்கள். இவ்விதம் கீழேபோய்க்கொண்டிருக்கும் இந்நாளில் நம் தீபிகையை விச்வாஸத்துடன் வாசிக்கும் பெண்மணிகள் ஆறுபேர்களிருக்கிறார்கள். இவர்களைப்போல் பலரும் வாசிக்க ஆரம்பித்தால் இவர்கள் ச்ரேயஸ்ஸை அடைவதோடு, இவர்கள் தங்களுடைய பர்த்தாவுக்கு தீபிகையை வாசிக்கும்படி உத்ஸாஹத்தை உண்டாக்குவதுடன் தங்களுடைய குழந்தைகளை ஆசாரத்தைவிட்டு விலகாமல் காப்பாற்றுவார்கள். ஆகையால் விஷயதானம் செய்கிறவர்கள் அரிய பெரிய தர்மஸூக்ஷ்மங்களை ஸுலபமான தமிழில் எழுதி அனுப்பினால் லோகோபகாரமாக இருக்கும். ஆகையால் எல்லோரும் ஐகமத்யத்துடன் ஏகமுகமாய் நம்முடைய ஸித்தாந்தம் தழைக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் ஸஹாயம் செய்தார்களேயாகில் நம் ஸமூஹம் நிரம்பவும் முன்னுக்கு வந்துவிடும்.

நல்லகார்யங்களுக்கு இடையூறுகள் பலஉண்டாவது வழக்கம். நீருண்ட மேகம்வருமுன் அதைக்கொண்டுபோக பெருங்காற்று கூடவேவந்துவிடுகிறதைப் பார்க்கிறோமல்லவா? இது ப்ரக்ருதியின் ஸ்வபாவம். இது நம் தேசத்தில் வெகுகாலமாக இருந்துகொண்டே இருக்கிறதென்பது ஸ்ரீதேசிகன்,

'[illegible]
[illegible]
[illegible]
[illegible]' என்று

ஸாதித்திருப்பதிலிருந்து வ்யக்தமாகவில்லேயா. ஆகையால்தீபிகை இப்பொழுது வ்ருத்திக்கு வந்துகொண்டிருக்கும்பொழுது, அந்யதாக்ரஹணத்தாலும் பல்பஜமானவிஷயங்களைக் கைப்பற்றிக்கொண்டும், பரமாணுக்களை பர்வதம்போல் செய்துகொண்டு இடையூறுகளைச்செய்யாமல், அஸூயாதேவியை அவ்விதமான சிலர் மனஸிலிருந்து விலகும்படி செய்து, ஐகமத்யத்துடன் ஸமூஹத்தினுடைய க்ஷேமத்தையே முக்யப்ரயோஜனமாகக் கொண்டு, சில்லரை விஷயங்களில் கண்ணை நோக்கவிடாமல், எல்லோருடைய மனதிலும் தங்களால் இயன்றஸஹாயம் செய்யவேண்டுமென்று தோன்றுமாறு செய்யவேணுமாய் ச்ரிய:பதியைப் ப்ரார்த்திக்கிறோம்.

கார்யதர்சி.

பத்ராதிபரின் குறிப்புகள்.

பெரியபெருமாள் கோவிலில் ஓர் சிலாசாஸனம்.

स्वस्ति श्रीः । शकाब्दे १२९३ ।
आनीयानीलशृङ्गद्युतिरचितजगद्रञ्जनादञ्जनाद्रेः
चेञ्च्यामाराध्य कञ्चित् समयमथ निहत्योद्धनुष्कान् तुलुष्कान् ।
लक्ष्मीक्ष्माभ्यामुभाभ्यां सह निजनगरे स्थापयन् रङ्गनाथं
सम्यग्वर्यां सपर्यां पुनरकृत यशोदर्पणो गोप्पणार्यः ॥
विश्वेशं रङ्गराजं वृषभगिरितटात् गोप्पणः क्षोणिदेवो
नीत्वा स्वां राजधानीं निजबलनिहतोत्सिक्ततौलुष्कसैन्यः ।
कृत्वा श्रीरङ्गभूमिं कृतयुगसहितां तं च लक्ष्मीमहीभ्यां
संस्थाप्यास्यां सरोजोद्भव इव कुरुते साधुचर्यां सपर्याम् ॥

இதன் அர்த்தம்:—

மங்களம் உண்டாகட்டும். சகவருஷம் 1293ல், நீலவர்ணமுள்ள கொடுமுடிகளுடைய காந்தியினாலே எல்லா ஜகத்தையும் ஸந்தோஷப்படுத்திக்கொண்டிருக்கும் அஞ்ஜநாத்ரி என்று சொல்லப்பட்ட (திருப்பதியிலிருந்து) செஞ்சி என்னும் ஊருக்கு எழுந்தருளப்பண்ணி, அவ்விடம் கொஞ்சகாலம் பூஜைசெய்து, வில்லும் கையுமாய் எதிர்த்துவந்த துலுக்கர்களை நன்றாகச் சண்டை செய்து கொன்று, ஸ்ரீ, பூ, தேவிகளுடன்கூடின ஸ்ரீ ரங்கநாதனை (திவ்ய மங்களவிக்ரஹத்தை) அவருடைய ஸொந்த பட்டணத்தில் எழுந்தருளப்பண்ணி, கீர்த்தியின் கண்ணாடிபோன்ற கொப்பணார்யர் என்பவர் முன்போல் அந்த ரங்கநாதனுக்கு திவ்யமான பூஜையைச் செய்வித்தார்.

கோபணர்என்னும் ப்ராஹ்மணன் ஸகல லோகங்களுக்கும் ஈச்வரனை ரங்கராஜனை திருப்பதி மலையிலிருந்து தன்னுடைய ராஜதானிக்கு எழுந்தருளப்பண்ணி, கர்வம்கொண்ட துலுக்கர்களுடைய ஸைந்யத்தை தன்சேனையால் கொன்று, ஸ்ரீரங்கம்என்னும் இடத்தை க்ருதயுகத்தோடு கூடினதாகச் செய்து, அந்தப் பட்டணத்தில் ஸ்ரீ பூதேவிகளுடன் ஸ்ரீ ரங்கநாதனை ப்ரதிஷ்டைபண்ணி, அந்த பகவானுக்கு ப்ருஹ்மாவைப்போல் தனக்கு உரித்தான பூஜையைச் செய்கிறார் என்று.

இந்த ச்லோகங்கள் ஸ்ரீரங்கத்தில் பெரியபெருமாள் கோவிலின் இரண்டாவது ப்ராகாரத்தின் கீழண்டைச்சுவரின் வெளிப்பக்கத்தில் ஸ்ரீ பாதுகைகள் எழுந்தருளப்பண்ணி இருக்கும் மண்டபத்துக்குப் பின்புறத்தில் வெட்டப்பட்டிருக்கின்றன. கி. பி 1310ம் வருஷத்தில் டில்லியில் ஆண்டுவந்த பட்டாணி அரசனுக்கு ஸேனாதிபதியான மாலிகாபர் என்பவன் பெரிய ஸைந்யத்துடன் தெற்கே படையெடுத்து தேசங்களை ஆக்ரமித்து சூரையிட்டு வரும்பொழுது, ஸ்ரீ ரங்கநாதனை கொள்ளைக்காரர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காக ஸ்ரீ பிள்ளைலோகாசார்யர் முதலானவர்கள் பெரிய பெருமாளை உபய நாச்சிமாருடன் திருமாலிருஞ்சோலைக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோய், பிறகு அநேக ஊர்களுக்குப் போய்க் கடைசியில் திருப்பதியில் எழுந்தருளப்பண்ணினார்கள். மாலிகாபர் என்பவன் டில்லிக்குத் திரும்பிப்போகும்பொழுது ஸுமார் 500-மணங்கு கனமுள்ள வைரம், பச்சை, கோமேதகம், ரத்னம், ஸ்வர்ணம் முதலிய ஐச்வர்யத்தைக்கொண்டுபோனான் என்று மஹம்மதிய சரித்ரக்காரர்கள் எழுதிஇருக்கிறார்கள். இவன் டில்லிக்குத் திரும்பிப்போனபிறகும்கூட மஹம்மதியர்கள் சோழபாண்டியநாடுகளை ஆக்ரமித்துக்கொண்டு நிரம்பவும் அந்யாயம் செய்துகொண்டிருந்தார்கள். இந்த ஸமயம் வித்யாரண்யருடைய ஸஹாயத்தினால் விஜயநகர ராஜ்யமானது துங்கபத்ராநதிக்கரையில் ஹம்பி என்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. புக்கமஹாராஜாவின் பிள்ளையாகிய கம்பணஉடையார் என்பவர் இந்தபாண்டியசோழதேசங்களை மஹம்மதியர்களிடமிருந்து ஜயித்தார். இவருக்கு ஒருதளகர்த்தர் கோபணார்யர்என்ற ஒரு ப்ராஹ்மணனிருந்தார். இவர் மிகவும் புத்திசாலி, பராக்ரமசாலி.

இந்த கோபணார்யர் திருப்பதியிலிருந்து தன்னுடைய சொந்தநகரமான செஞ்ஜிக்கு ஸமீபத்திலுள்ள சிங்கபுரம் என்னும்ஊருக்கு பெருமாளை எழுந்தருளப்பண்ணி ஆராதித்துவந்தார். கொஞ்சகாலம் கழித்து தெற்கு தேசத்தை மஹம்மதியர்களிடத்திலிருந்து ஜெயித்து ராஜ்யத்தை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு பெரியபெருமாளை உபயநாச்சிமாருடன் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளப்பண்ணினார். வெகுகாலம் ஸ்ரீரங்கத்தில் பெருமாள்எழுந்தருளி

யிராத கஷ்டத்தை நிவ்ருத்திசெய்த கோபணார்யர்என்பவருக்கு க்ருதஜ்ஞதானுஸந்தானமாய் ஸ்ரீதேசிகன் கீழ் குறிக்கப்பட்ட இரண்டு ச்லோகங்களையும் செய்தருளினார். இவை சகஞூம் 1293 (கி. பி. 1371)ல் கீழே குறிப்பிட்டிருக்கிற இடத்தில் வெட்டப்பட்டிருக்கின்றன.

இதைக் குறித்து கோவிலொழுகு என்னும் க்ரந்தத்தில் பின்வரும் ஸமாசாரங்கள் தெரியவருகின்றன.

சகஞூம் 1149க்குச் சரியான அக்ஷயவருஷத்தில் தொண்டைமண்டலத்தை துலுக்கர்கள் ஆக்ரமித்துவிட்டார்கள். இந்தத் துலுக்கர்கள் படையெடுத்து தெற்குமுகமாய் சமயவரத்துக்கு ஸமீபத்தில் வந்துவிட்டார்கள் என்று ஸமாசாரம் கோவிலதிகாரிகளுக்குத் தெரிந்ததும், அவர்கள் உபயநாச்சிமார்களுடன் அழகியமணவாளனை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு, ஜ்யோதிஷ்குடி, திருமாலிருஞ்சோலை, கோழிக்கூடு முதலிய இடங்கள் வழியாய் திருநாராயணபுரத்துக்கு எழுந்தருளப்பண்ணி, அவ்விடம் கொஞ்சகாலம் அவர்களுக்கு ஆராதனம் செய்துவந்தார்கள். பிறகு திருப்பதி மலைக்கு திவ்யமங்களவிக்ரஹங்களை எழுந்தருளப்பண்ணி அவ்விடம் வெகுகாலம் அழகியமணவாளன் பூஜையிலிருந்தார். இந்த அந்தராளத்தில் பாண்டியநாடும் துலுக்கர்களால் ஆக்ரமிக்கப்பட்டது. இந்த ஸமயத்தில் வித்யாரண்யஸ்வாமியின் பரிச்ரமத்தால் விஜயநகரம்என்னும் பட்டணத்தில் கர்ணாட ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. ஹரிஹர ராயர் என்னும் அரசன் தொண்டைமண்டலத்தை துலுக்கர்களிடமிருந்து ஜயித்தான். அவனுடைய சிற்றரசனான கோபணஉடையார் செஞ்சியில் வாஸம்செய்துகொண்டிருந்தான். இவன் ஸ்ரீ ரங்கநாதனை உபயநாச்சிமார்களுடன் திருப்பதி மலையிலிருந்து தன்னுடைய செஞ்சியின் ஸமீபத்திலுள்ள சிங்கபுரம் என்னும் ஊருக்கு எழுந்தருளப்பண்ணி பூஜைசெய்துவந்தான். தன்னுடைய ஸைந்யத்துடன் தெற்கே படைஎடுத்துவந்து துலுக்கர்களை ஜயித்து ஸ்ரீ ரங்கத்தை துலுக்கர்களுடைய உபத்ரவமில்லாமலாக்கி உபயநாச்சிமார்களுடன் ரங்கநாதனை ஸ்ரீரங்கத்தில் சகஞூம் 1293க்குச் சரியான பரீதாபிஞூ வைகாசிமீ 17உ முன்போல் எழுந்தருளப் பண்ணிவைத்தார். இந்த கோபணார்யன் இந்தவிஷயம் எல்லாருக்கும் தெரியும்பொருட்டு கோவிலின் இரண்டாவது ப்ராகாரத்தில் கீழண்டைச் சுவரில் முதல் ச்லோகத்தை கல்வெட்டாக வெட்டிவைத்தான்—என்று.

திருதீய ப்ருஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமியால் அருளிச்செய்யப்பட்ட குருபரம்பரா ப்ரபாவத்திலும் பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது:— துலுக்கர்கள் திருச்சினாப்பள்ளியை பிடித்துக்கொண்டபொழுது ஸ்ரீரங்கத்திலிருக்கும் கோவிலதிகாரிகள் அழகிய மணவாளப்பெருமாளை ரஹஸ்ய

மாய் திருமலைக்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோனார்கள். பிறகு கோபணராயர் என்பவர் செஞ்சிக்கு சமீபத்தில் சிங்கபுரம் என்னும் ஊருக்கு பெருமாளை எழுந்தருளப்பண்ணிக்கொண்டுபோனார். அதன் பிறகு ஸ்ரீரங்கத்திற்கு உபயநாச்சிமார்களுடன் எழுந்தருளப்பண்ணி முன் போலவே பெருமாளை பிரதிஷ்டைசெய்துவைத்தார். இந்த ஸமயத்தில் ஸ்ரீவேதாந்ததேசிகரால் மேலே குறிக்கப்பட்ட முதல் ச்லோகத்தால் கோபணராயர் ஸ்தோத்ரம் செய்யப்பப்பட்டார் - என்று எழுதப்பட்டிருக்கிறது.

மேலே குறிக்கப்பட்ட இரண்டு க்ரந்தங்களிலிருந்தும் முதல் ச்லோகம் ஸ்ரீவேதாந்த தேசிகனால் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறதேதவிர இரண்டாவது ச்லோகத்தைப்பற்றி யாதொன்றும் எழுதப்படவில்லை. கல்வெட்டில் இரண்டு ச்லோகங்களும் காணப்படுகின்றன. முதல் ச்லோகம் எந்த விதமான அக்ஷரத்தில் வெட்டப்பட்டிருக்கிறதோ அதேவிதமான அக்ஷரத்தில் இரண்டாவது ச்லோகமும் வெட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டு ச்லோகங்களின் தாத்பர்யம் கிட்டதட்ட ஒன்றாகவேயிருப்பதால் மேலே குறிக்கப்பட்ட இரண்டு க்ரந்தங்களிலும் முதல் ச்லோகத்தையே எடுத்துக்கொண்டு சொல்லவேண்டிய விஷயம் வந்துவிட்டது என்று இரண்டாவதை விட்டிருக்கலாம். தொட்டையாசார்யர் ஸாதித்த வைபவப்ரகாசிகையின் அண்ணப்பங்கார் செய்த தமிழ் பதிப்பில் இந்த இரண்டு ச்லோகங்களும் ஸ்ரீதேசிகனால் செய்யப்பட்டவை என்று வ்யக்தமாக எழுதப்பட்டிருக்கிறது. கோபணார்யர் என்பவர் உடையார்என்று கோவிலொழுகில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இவர் ப்ராஹ்மணன்என்று இந்தசாஸனத்திலும்ஸரி இன்னும் அநேக சாஸனங்களிலிருந்தும் வ்யக்தமாக ஏற்படுகிறது.

சாஸனம் வெட்டப்பட்ட வருஷம் 'பந்துப்ரிய' வருஷம் அதாவது கடபயாதி எண்ணிக்கையின் ரீதியில் சகவருஷம் 1293 (கி. பி. 1371) என்று ஏற்படுகிறது. ஸ்ரீதேசிகன் கலியுகம் 4370-வது வருஷத்தில் பிறந்ததாக ப்ரஸித்தி. அது கி. பி. 1269-க்குச் சரியானது. அவர் நூற்றொருவருஷம் ஜீவித்திருந்ததாகச் சொல்வதால் கி. பி. 1370-வருஷத்தில் திருநாட்டை அலங்கரித்து இருக்கவேண்டும். குருபரம்பரையில் இவர் ஸௌம்யஸூ கார்த்திகைமீ புதன் பௌர்ணமிதினம் திருநாட்டை அலங்கரித்ததாக எழுதப்பட்டிருக்கிறது. இது நவம்பர்மீ கி. பி. 1369-க்குச் சரியானது. கோவிலொழுகில் பெருமாளை ப்ரதிஷ்டைபண்ணினது சகஸூ 1293-க்குச் சரியான பரீதாவிஸூ வைகாசிமீ 17உ என்று எழுதப்பட்டிருக்கிறது. இது கி. பி. 1371 (1371 மேமீ 13உ க்குச்) சரியானது. சாஸனம் கி. பி. 1371-ல் ஏற்பட்டிருப்பதால் இந்த ச்லோகங்கள் ஸ்ரீதேசிகனால் செய்

ப்பட்டவை என்று எப்படிச்சொல்லக்கூடும்? யதீந்த்ரப்ரவணப்ரபாவம் என்னும் க்ரந்தத்தில் பெருமாளை பிரதிஷ்டைசெய்தது பஹுப்ரியஸூ என்று எழுதப்பட்டிருக்கிறது. இது ஸரியல்ல. சாஸனத்தில் பந்துப்ரிய என்று இருக்கும்போது இந்த க்ரந்தத்தில் பஹுப்ரிய என்று எழுதப்பட்டிருப்பதற்குக் காரணம் தெரியவில்லை.

ஆகையால் காலத்தில் பூர்வாபர்யம் ஏற்படுவதாலும் கோவில் ஒழுகு குருபரம்பரை இந்த இரண்டு க்ரந்தங்களில் முதல் ச்லோகம் மாத்திரம் காணப்படுவதாலும், இரண்டு ச்லோகங்களில் கிட்டத்தட்ட ஒரே அர்த்தம், ஏற்படுவதாலும் பௌநருக்த்யம் வரும்படி ஸ்ரீதேசிகன் இவ்விதமான ச்லோகம் எழுதமாட்டார் என்றும், கல்வெட்டுகள் எந்தவிதத்திலிருக்கவேண்டுமோ அவ்விதம் இந்த சாஸனமில்லையென்றும், இவைகள் ஸ்ரீதேசிகனால் செய்யப்படவில்லையென்றும் ஆக்ஷேபிக்கிறார்கள். இது ஸரியல்ல. இவை ஸ்ரீதேசிகனுடைய ச்லோகங்களென்றும் ஸரியான கல்வெட்டு என்றும் இப்பொழுது உபபாதிப்போம் :—

(1) முதல் ச்லோகத்தில் '' [illegible] '' என்றிருக்கிறது.

ஸ்ரீ ஹம்ஸஸந்தேசத்தில் ஸ்ரீதேசிகன்,

[illegible]

என்று ஸாதித்திருக்கிறார்.

'[illegible]' என்று எழுதியிருப்பவரைக்காட்டிலும் [illegible] என்று எழுதினவர் வேறு என்று எப்படி சொல்லக்கூடும். மேலும் ஸ்ரீதேசிகனுக்கு ப்ராஸமானது மிகவும் ஹ்ருதயங்கமான அலங்காரம். இதை அவருடைய ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களிலும் தமிழ் க்ரந்தங்களிலும் பார்க்கலாம். கோபாலவிம்சதியில்,

'[illegible] ॥ என்றும்

அம்ருதாஸ்வாதினியில்,

‘பாவளருந் தமிழ்மறையின் பயனேகொண்ட பாண்பெருமாள் பாடிய தோர் பாடல் பத்தில்’ என்றும் காணப்படுவதுபோல் இரண்டாவது ச்லோகத்தில் ஒவ்வொரு பாதத்திலும் ப்ராஸமிருப்பதால் இந்த இரண்டு ச்லோகங்களும் ஸ்ரீதேசிகனால் செய்யப்பட்டவை என்பதில் என்ன ஸந்தேஹமிருக்கிறது?

(2) கல்வெட்டுகளில் எப்படி சாஸனங்கள் ஆரம்பிக்குமோ அப்படியே இவ்விடத்திலும் **ஸ்வஸ்திஸ்ரீ:** என்று ஆரம்பித்திருக்கிறது. ப்ரசஸ்தியைச் சொல்லுமிடத்தில் எப்பொழுதும் இரண்டு ச்லோகங்கள் எழுதுவது ஸம்ப்ரதாயம். ஆகையால் தான் சரமச்லோகம் எழுதுவதில் இரண்டு ச்லோகங்கள் எழுதுவது வழக்கம். முதல் ச்லோகத்தில் ஸ்ரீரங்கத்தில் ஸ்தாபித்தார் என்றுமட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவது ச்லோகத்தில் உபரோதமில்லாமல் க்ருதயுகத்தில் எப்படி தர்ம பரிபாலனம் நடக்குமோ அவ்விதம் ஸ்ரீ ரங்கத்தில் நடக்கும்படி செய்து என்று சொல்லியிருப்பதால் பௌனருக்த்ய தோஷமில்லை.

(3) ஸாதாரணமாய் தானங்கள் எப்போதும் நல்ல புண்யகாலத்தில் செய்வது வழக்கம். அதை செப்பேடுகளில் பதிவுசெய்து தானம் வாங்கினவர்களுக்கு ஆதாரமாக கொஞ்சகாலம் க்ரமித்துக் கொடுப்பது ஸஹஜம். இவ்விதம் அநேக தானசாஸனங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதுபோலவே பெருமாளை ப்ரதிஷ்டைப் பண்ணின உபகாரத்திற்கு ஸ்ரீதேசிகனால் இந்த ச்லோகங்கள் செய்யப்பட்டு பிறகு ப்ராகாரத்தில் வெட்டப்பட்டிருப்பது ஸஹஜமே. கோவிலொழுகில் குறிக்கப்பட்ட காலமானது கல்வெட்டிலிருந்து எடுத்துக்கொண்டதே தவிர வேறு ஆதாரத்திலிருந்து எழுதப்பட்டதாகத் தெரியவில்லை.

(4) ஸ்ரீதேசிகன் ஸத்யமங்கலத்தில் எழுந்தருளி ஸ்ரீபாஷ்யகாருடைய ஸித்தாந்தத்தை ப்ரவசனம் பண்ணிக்கொண்டிருக்கும் காலத்தில் ஸ்ரீரங்கத்துக்கு உண்டான கஷ்டத்தாலும் ஸ்ரீரங்கநாதன் அவ்விடம் எழுந்தருளியிராமலிருந்த வருதத்தாலும் அபீதிஸ்தவம் என்னும் ஸ்தோத்ரரூபமாய் பகவானை சரணாகதிசெய்தது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். அதில்ஸ்ரீரங்கத்தின் அலங்கோல ஸ்திதியையும், அவ்வூரில் திவ்யமங்களவிக்ரஹம் இல்லாததால் ஸ்ரீதேசிகன் படுங்கஷ்டம் இவ்வளவு என்று ஸ்பஷ்டமாய் தெரியவில்லையா? அதில்,

கலிப்ரணிதிலக்ஷணை: கலிதஶாக்யலோகாயதை:
துருஷ்கயவநாதிபிர் ஜகதி ஜ்ரும்பமாணம் பயம் ।

ப்ரக்ருஷ்டநிஜஶக்திபி: ப்ரஸபமாயுதை: பஞ்சபி:
க்ஷிதித்ரிதஶரக்ஷகை: க்ஷபய ரங்கநாத க்ஷணாத் ॥

(ஹே ரங்கநாத! கலிபுருஷனுடைய சாரர்களைப்போல் லக்ஷணங்களையுடைய சாக்ய, சார்வாக, துலுக்கர், யவனர் முதலான சத்ருக்கூட்டங்களால் ஜகத்தில் உண்டாயிருக்கும் பயத்தை உத்க்ருஷ்டமான பராக்ரமத்துடன் கூடினவும் ப்ராஹ்மணர்களை ரக்ஷிக்கிறதுகளுமான உம்முடைய ஐந்து ஆயுதங்களாலேயும் உடனே சீக்கிரத்தில் போக்கும்) என்று ப்ரார்த்தித்ததால், சாக்ய, சார்வாக, துலுக்கர், யவனர்களால் ஸ்ரீரங்கம் ஆக்ரமிக்கப்பட்டது என்பது நிச்சயமாய் தெரிகிறது. இந்த ஸமயத்தில்,

விஷாதபஹுலோதயம் விஷயநிர்ஜிதோ துர்ஜயாத்
பிபேமி வ்ருஜினோத்தரஸ்த்வதநுபூதிவிச்சேதத: ।

(துக்கம் ஜாஸ்தியாயிருப்பதாலும் ஜயிக்கமுடியாத விஷய வ்யாபாரங்களால் ஜயிக்கப்பட்டவனையும், அநேக பாபத்தைச் செய்தவனை நான் உம்முடைய திவ்யமங்கள விக்ரஹஸேவையினால் உண்டாகும் ஆநந்தத்தை அடையாதவனாய் ரொம்பவும் பயப்படுகிறேன்) என்று ஸாதித்திருப்பதால் திவ்யமங்கள விக்ரஹம் ஸ்ரீரங்கத்தில் இல்லையென்று சொல்லலாம். ஆனால் இதிலிருந்து அதை நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. ஸ்ரீதேசிகன் ஸத்யமங்கலத்தில் எழுந்தருளியிருந்ததாலும், ஸ்ரீரங்கம் சத்ரு ஸைந்யத்தால் ஆக்ரமிக்கப்பட்டபடியாலும் இவர் ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளமுடியாதிருந்தபடியால் பெருமாள்ஸேவை இல்லாமலிருந்ததினால் ‘த்வதநுபூதிவிச்சேதத:’ என்றும் ஸாதித்திருக்கலாம். ஆனால் திவ்யமங்கள விக்ரஹமே ஸ்ரீரங்கத்தில் இல்லையென்று பின்வரும் ச்லோகத்தால் விசதமாக ஏற்படுகிறது.

பயம் ஶமய ரங்கதாம்நி ஜநதாபிவாஞ்ச்சாஸ்பதாம்
ஶ்ரியம் வர்த்தய ப்ரபோ ஶ்ரிதவிபக்ஷமுந்மூலய ।
ஸ்வயம் ஸமுதிதம் பவத்வபு நிஶாமயந்த: ஸதா
வயம் த்ரிதஶதீர்க்கிகாஸமமிவ ஸுகம் விந்தேமஹி ॥

ஹேமுகுந்த! ஸ்ரீரங்கத்தில் பயத்தை நிவ்ருத்திசெய்யும், எல்லோராலும் விரும்பக்கூடிய ஸம்பத்தை வ்ருத்திபண்ணிவைய்யும். ஹேப்ரபுவே! ஆச்ரிதர்களுக்கு உண்டான சத்ருக்களை வேர்பிடுங்காய் பிடுங்கிவிடும். நாங்கள் ஸ்வயமாய் ஆவிர்பவித்த உம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தைப்பார்த்துக்கொண்டு தேவதைகளுக்கு உண்டாகிற ஸுகத்தைப்போல் எங்களுக்கு

இந்தபூலோகத்தில் உண்டாகும்படி பண்ணிவைய்யும். இதிலிருந்து ஸ்ரீரங்கநாதனுடைய திவ்யமங்கள விக்ரஹம் ஸ்ரீரங்கத்தில் இல்லை என்பது நிச்சயமாய் ஏற்படுகிறது. ஆகையால் மறுபடி அவ்விடம் எழுந்தருளும்படி ப்ரார்த்திக்கிறார்.

இப்படி மிகவும் பக்தியுடன் சரணாகதிசெய்ததை பகவான் அங்கீகரித்த அளவில் கோபணார்யன் என்னும் ப்ரபு சிங்கபுரம்என்னும் ஊரிலிருந்து ஸ்ரீரங்கத்துக்கு எருந்தருளப்பண்ணி அவ்விடத்தில் ஸ்ரீரங்கநாதனை உபயநாய்ச்சிமார்களுடன் ப்ரதிஷ்டை செய்துவைத்தான். பகவான் பிறகு ஸத்யமங்கலத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீதேசிகனுக்கு ராத்ரி ஸ்வப்நத்தில் 'உம்முடைய ப்ரபத்தியை ஸபலமாக்கின நம்மை சடக்கென வந்துகாணீர்' என்று ஸாதிக்க,அப்படியே ப்ரதிதினம் வந்தவர்கள் ஸ்ரீரங்கத்தில்பெருமாள் எழுந்தருளினதையும், நித்யோத்ஸவம் விக்னமின்றி நடப்பதையும் சொல்லக்கேட்டு, ஸந்தோஷமடைந்து, பரிஜனங்களுடன் ஸத்யமங்கலத்தைவிட்டு ஸ்ரீரங்கம்போய் பெருமாளைஸேவித்து ஸந்தோஷமடைந்த ஸ்ரீதேசிகன் கோபணார்யர்செய்த உபகாரத்தை எப்படி அநுஸந்தானம் செய்யாமலிருப்பார், ஆகையால் ஸ்ரீதேசிகனுடைய ஜீவனகாலத்தில் ப்ரதிஷ்டைஏற்பட்டு, பிறகு ப்ராகாரத்தில் ச்லோகங்கள் வெட்டப்பட்டிருக்கவேண்டும் என்று ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது.

காவியாலும் சுண்ணாம்பாலும் மறைக்கப்பட்டிருக்கிற இந்தசாஸனத்தை கோவிலதிகாரிகள் சுத்தம்செய்து எல்லோரும் வாசிக்கும்படிசெய்தால் பூர்வ வ்ருத்தாந்த ஸ்மரணம் உண்டாகி ஸேவார்த்திகளுக்கு பக்த்யதிசயம் நம்மாசார்யனிடம் உண்டாகும் என்பதில் ஸந்தேஹமில்லை.

... ...

இந்த ஸ்ரீரங்கம் பெரியபெருமாள் கோவிலில் அநேக இடங்களில் ஸுமார் 4000 சாஸனங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. கொஞ்சம் வருஷத்துக்கு முன்வரையில் இந்துதேசசரித்திரத்துக்கு உபயோகமாகக்கூடிய சாஸனங்களைமாத்திரம் கவர்ன்மெண்டார் காபிசெய்தார்களேதவிர எல்லாவற்றையும் காபிசெய்யவில்லை. கொஞ்சவருஷகாலமாகத்தான் எல்லாசாஸனங்களையும் காபிசெய்து அச்சிடவேண்டுமென்ற அபிஸந்தி கவர்ன்மெண்டாருக்கு உண்டாகி இருக்கிறது. இந்த சாஸனங்கள் வருஷக்கணக்காய் காவியாலும் சுண்ணாம்பினாலும் மறைக்கப்பட்டிருப்பதால் இடம்தெரியாமல் விட்டுப்போகிறதுசில. அப்படித் தெரிந்தும் இந்தக்காவி சுண்ணாம்புபட்டைகளை எடுத்து காபிசெய்துகொள்ளும்படி கோவிலதிகாரிகள் உபகரிக்கிறதில்லை. ஸர்க்கார்செலவில் செய்துகொள்ள கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் கூலிக்காரர்களை திட்டம்செய்து கொடுக்கும்படி கோவிலதிகாரிகளை கேட்டுக்

கொண்டால் வழக்கமான கூலிக்கு அதிகமாக திட்டம் செய்து கொடுப்பதால் ஸர்க்காருக்கு பணம் ஜாஸ்தியாகி அந்த உத்தியோகஸ்தர்களுக்கு ஏற்பட்ட திட்டத்துக்கு மேலேபோய்விடுமென்று அவர்களும் சுத்தம்செய்ய யத்தனிக்கிறதில்லை. ஆகையால் எவ்விதத்திலும் சுத்தம் ஆகிறதில்லை. இதனால் நல்ல சாஸனங்கள் நமக்குத் தெரியாமலே இருந்துவருகின்றன. இந்தக்கோவிலில் இருக்கும் ஸுமார் 4000 சாஸனங்களுக்குள் ஸுமார் 200 தான்காபிசெய்யப்பட்டிருக்கின்றன. மிகுதியும் காபிசெய்து படிக்கப்பட்டு, அச்சிடப்பட்டால் எவ்வளவு விசேஷ ஸமாசாரங்கள் நமக்குக்கிடைக்கும். இதை உத்தேசித்து திருப்பதி தேவஸ்தானத்திலிருக்கும்எல்லாசாஸனங்களையும்காபிசெய்து வாசித்து, அச்சிடுவதற்கு ப்ராசீனலேகத்தில் ஸமர்த்தரான ஒருவரை ஸ்ரீமஹந்து நியமித்து ஸுமார் இரண்டுவருஷகாலமாய் வேலை நடந்துவருகிறது. கொஞ்சகாலத்தில் ஒரு புஸ்தகரூபமாய் எல்லாசாஸனங்களும் டிரான்ஸ்லேஷனுடன் வெளிவரும். ஸ்ரீமஹந்துவுக்குத் தோன்றினதுபோல் எல்லாதேவஸ்தானம் தர்மகர்த்தாக்களுக்கும் மனதில் தோன்றி தங்கள் தங்கள் தேவஸ்தானத்திலுள்ள சிலாசாஸனங்களையும் தாம்பிரசாஸனங்களையும், தேசபாஷையில் மொழிபெயர்த்து மூலத்துடன் அச்சிட ஏற்பாடு செய்தார்களாகில் அந்தந்த தேவஸ்தானத்தின் சரித்ரம் தெரிவதுடன், நம் பூர்வாசார்யர்களின் வாஸ்தவமான சரித்ரமும் வெளிக்கு வரும். இந்த விஷயத்தில் கோவிலதிகாரிகள் ச்ரத்தை எடுத்துக்கொண்டு யத்தனிப்பார்களென்று நம்புகிறோம்.

ஸ்ரீபரகால மடம்.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமாகிய ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் அவிச்சிந்நபரம்பரையாய் மூன்று மடங்கள்பிரசித்திபெற்றுவிளங்குகின்றன. அவற்றில் ஸ்ரீப்ருஹ்மதந்த்ர பரகாலமடம் மைஸூரை ப்ரதான ஸ்தானமாகக் கொண்டது. அந்தமடத்தில் ஸாதாரணமாய் லக்ஷ்மீஹயக்ரீவன் ஆராதிக்கப்பட்டுவருகிறார். ஸரஸ்வதியால் ஸ்ரீபாஷ்யகாரருக்குக் கொடுக்கப்பட்டு ஸ்ரீபாஷ்யகாரர் ஆராதித்துத் தம் அந்திமதசையில் ஜ்ஞானபுத்ரரான திருக்குருகைப்பிரான் பிள்ளானுக்குப் பிரசாதிக்க அவர் முதல் அந்த திருவம்சத்தில் நாலுதலைமுறை ஆராதனத்தில் எழுந்தருளியிருந்து நாலாவதான ஸ்ரீபுண்டரீகாக்ஷ தேசிகரால் ஸ்வப்ந நியமனப்படி ஸ்ரீதேசிகனுக்கு எழுந்தருளப்பண்ணிக் கொடுக்கப்பட்டார். ஸ்ரீதேசிகன் ஆராதித்து தம் சரம ஸமயத்தில் தம்திருவடிகளான பிருஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமிக்கு ப்ரஸாதிக்க அதுமுதல் அந்த மடபரம்பரையில் ஆராதனத்தில் எழுந்தருளியிருக்கிறார்.

ஸ்ரீஅஹோபிலமடத்தின் ஸ்தாபகாரான ஸ்ரீமத் ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் இந்த ப்ருஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமியின் திருவடிகளான கடிகாசதகம் அம்மாள் ஸன்னிதியில் ஸம்ப்ரதாயார்த்தோபதேசம்

பெற்றவர். ஸ்ரீப்ருஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமி பரம்பரையில் நாலாவது பட்டம்ஸ்வாமி ஸ்ரீபரகாலஸ்வாமி என்று திருநாமம்பெற்றவர். காலக்கிரமத்தில் பிருஹ்மதந்த்ர பரகாலஸ்வாமி என்கிறபட்டப் பெயரால் அங்கமடத்து ஸ்வாமிகள் வ்யவஹரிக்கப்படலானார்கள். ஸ்ரீதேசிகன் திருவடிகளான ப்ருஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரஸ்வாமி முதலாக முப்பத்திரண்டாவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீவாகீச ப்ருஹ்மதந்த்ர பரகாலஸ்வாமி சென்ற புரட்டாசிமீ 19உ க்ருஷ்ண த்ருதீயையில் பரமபதத்திற் கெழுந்தருளிவிட்டார்.

இந்தஸ்வாமி பிரபவ வருஷம் ஆஷாடமாஸம் ஸ்வாதி நக்ஷத்திரத்தில் திருவவதரித்தவர். கௌசிககோத்திரம். நம் ஸித்தாந்தத்தில் அனேக உத்தம வாத கிரந்தங்கள் அருளிச்செய்த மஹாவித்வானாகிய ஸூரபுரம் அண்ணயாசார்ய தீக்ஷிதருக்கு மாதுலரும் ஆசார்யருமாகிய தீக்ஷித ஸ்ரீநிவாஸாத்வரிகளின் திருவம்சத்தில் அவருக்கு ஐந்தாம்தலைமுறையாக திருவவதரித்தவர். பால்யமே துடங்கி சாந்த ஸ்வபாவமுடையவர். மேதாவி. வியாகரண சாஸ்த்ரத்தில் பூர்ண பாண்டித்யம் பெற்றவர். இதர சாஸ்த்ரங்களிலும் தேர்ச்சியடைந்தவர். மைசூர் ராஜகீயபரீக்ஷையிலும் உத்தீர்ணர். வைராக்கியநிதி. கத்தவால் ஸமஸ்தானம் தர்மாதிகாரி. இந்த ஸ்வாமி தமக்கு முன்ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீகிருஷ்ணப்ருஹ்மதந்த்ரபரகால மஹாதேசிகன் ஸன்னிதியில் பஞ்சஸம்ஸ்காரம் முதலாக ஸம்ப்ரதாயார்த்தங்களோடு பரந்யாஸமும் ஸந்யாஸமும் பெற்றவர். ஆஸ்தானத்தில் பட்டாபிஷேகம் பெற்றதுமுதல் ஸ்ரீபாஷ்ய ஸ்ரீரஹஸ்யத்ரயஸாராதி காலக்ஷேபமே ப்ரதானமாக நடத்திப்போந்தவர். ஸர்வகாலமும் கிரந்தாவலோகனத்திலேயே எழுந்தருளியிருந்தவர்.

இந்த ஸ்வாமி விஷயத்தில் முக்கியமாய் குறிப்பிடக்கூடிய விஷயங்களாவன:—

(1) இந்த ஸ்வாமிக்கு ஆஸ்தானம் கொடுக்கக்கூடாதென்று மூர்த்தந்யமாயிருந்து ஆக்ஷேபித்த ஸ்வாமிகள் அனைவரும் பிறகு இந்த ஸ்வாமியை பிரதிதினம் தண்டன் ஸமர்ப்பித்து ஹார்த்தமான பக்தியோடே ஸ்தோத்ரம்செய்து பிரதிபத்தியோடிருந்து வந்தார்கள்.

(2) ஸ்ரீஅஹோபிலமடத்தில் 40-வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாத சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் மைஸூருக்கு எழுந்தருளவேண்டிய பிரகரணத்தில் ராஜஸ்தானத்தில் நடக்கவேண்டிய மர்யாதை விஷயத்தில் தமக்கு நடப்பதுபோலவே அந்தஸ்வாமிக்கும் எல்லா மர்யாதைகளும் ஸரியாக நடக்கவேண்டுமென்று எழுதியனுப்பினார்.

(3) ஸ்ரீபரகாலமட சிஷ்யர்களுக்குள் பரஸ்பரம் இருந்த கக்ஷி பிரதிகக்ஷிகளில் ஒன்றிலும் தாம் பிரவேசியாதே உதாஸீநமாயிருந்து அம்முகத்தாலே அவர்களுக்கு ஒற்றுமையுண்டாகும்படி செய்தார்.

(4) அபூர்வமாயும் ஆவச்யகமாயும் உள்ள ஸம்ப்ரதாய க்ரந்தங்களை அச்சிட்டு பிரசுரஞ்செய்யவேண்டுமென்றும் தமிழ் பாஷையில் தெலுங்கு லிபியில் வேதாந்ததீபிகையைப்போலே ஒரு பத்திரிகை பிரசுரிக்கும்படி செய்யவேண்டுமென்றும் திருவுள்ளம் பற்றியிருந்தார்.

(5) ஸ்ரீஹயக்ரீவன் திருவாராதனம் ததீயாராதனம் இவைகளுக்காக பெரியபூமியை சாசுவதமாக ஏற்பாடு செய்தருளினார், என்றிவை முதலியன.

இந்தஸ்வாமி ஆநந்தவருஷம் ஐப்பசிமீ த்தில் பட்டாபிஷேகம் பெற்று ஆஸ்தானத்தில் எழுந்தருளினார். பதினொரு சாதுர்மாஸ்யம் ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந்தார். இந்த ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் அனேக கிரந்தங்கள் அருளிச்செய்திருக்கிறார். பூர்வாச்ரமத் திருநாமம் புராணம் நரஸிஹ்மாசாரியர்.

இந்த ஆஸ்தானத்துக்கு மஹாராஜா ஸம்ஸ்க்ருதகாலேஜில் ப்ரொபஸரான வித்வான் ஆத்மகூர் ஸ்ரீ. உப. வே. ரங்காசார்யர்ஸ்வாமி, எழுந்தருளுவதாகச் நிச்சயித்து அவர்ஸந்யாஸத்தை சென்ற புரட்டாசிமீ 27உ ஸ்வீகரித்துவிட்டார். புரட்டாசிமீ 30உ பட்டாபிஷேகம் மஹாராஜாவால் கூடவே இருந்து செய்யப்பட்டது. மஹாராஜா ஸ்ரீபாததீர்த்தம் ஸ்வீகரித்துக்கொண்டு ஸம்பாவனையும் செய்தார். இந்தஸ்வாமி மடத்தினுடைய லௌகீக கார்யங்களில் தனக்கு ஒருஸம்பந்தமுமிருக்கக்கூடாதென்றும், அனுஷ்டானம் ஆராதன்ம் க்ரந்த காலக்ஷேபங்களுக்கு ஒருவித உபரோதமுமில்லாமலிருக்க வேண்டுமென்றும், தன்குடும்பத்தார்களுக்கு ஸர்க்காரிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ. 100 கொடுக்கப்படவேண்டுமென்று ஒப்பந்தத்தின் பேரில் ஆஸ்தானத்தை அலங்கரிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இந்தஸ்வாமி நல்லவித்வானானதால், ஸ்ரீஹயக்ரீவாராதனம், காலக்ஷேபங்களை குறைவற நடத்திவருவதோடு, நம்முடைய வேதாந்ததீபிகையை தெலுங்குபாஷையில் பிரசுரம்செய்ய ஸஹாயம்செய்து, ஸ்ரீமத்ரஹஸ்ய த்ரயஸாரம் முதலிய மணிப்ரவாள க்ரந்தங்களை கன்னடபாஷையில் மொழிபெயர்த்து கர்னாடகதேசத்து ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உபயோகமாகும்படி செய்யவேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

அர்ச்சாவதார வைபவம்.

(ஸ்ரீ. உ.வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமி, காரப்பங்காடு).

அர்ச்சாவதார வைபவம் நிரூபிக்கப்படுகிறது. அர்ச்சையாவது "அர்சா பூஜா ப்ரதிமயோ:" என்கிறபடி ப்ரதிமை என்று சொல்லப்படும். ப்ரதிமையாவது தான் ஆராதிக்க வேண்டியதற்காகவும் அங்யருடைய உஜ்ஜீவனார்த்தமாகவும் தங்கம் வெள்ளி முதலிய த்ரவ்யங்களைக்கொண்டு தனக்கு அபிமதமாயுள்ள விக்ரஹங்களுக்கு ஸஜாதீயங்களாக ஏறியருளப்பண்ணுகிற விக்ரஹங்கள். அந்த விக்ரஹங்களில் ப்ரதிஷ்டாவிசேஷங்களாலும் தன்னுடைய ஸங்கல்பத்தாலும் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தமாக ஸமஸ்த கல்யாண குணங்களுடன் கூடினவனாய்க்கொண்டு கோயில்களிலும் க்ருஹங்களிலும் எழுந்தருளியிருக்குமிருப்பு, அர்ச்சை. இதற்கு ப்ரமாணம் கடவல்லியில், [illegible] என்கிற வாக்கியத்தால் கல்யாணகுண பூர்ணமான அர்ச்சாவதாரமே நித்யாச்ரயணீயமாயும் ஸௌலப்யத்துக்கு எல்லை நிலமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இதை அனுஸரித்து ஸர்வேச்வரனாலே ப்ரணீதமான பாஞ்சராத்ரத்தில் இந்த அர்ச்சாவதாரத்தினுடைய ப்ரதிஷ்டை பூஜாக்ரமங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. வேதவேத்யே பரே பும்ஸி என்கிற ச்லோகத்தின்படி வேதத்தினுடைய ப்ராதுர்பாவ விசேஷமான ஸ்ரீராமாயணத்தில் 'ஸஹபத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்'. என்றும் 'ஸ்ரீமத்யாயதநே விஷ்ணோ: சிச்யே நரவராத்மஜ:' என்றும் இப்படி இக்ஷ்வாகு வம்சர்களுக்கே ஆராத்யமான ஸ்ரீரங்கவிமானம் இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பாத்மபுராணத்திலும் இந்த ஸ்ரீரங்கத்தினுடைய மாஹாத்ம்யம் விசேஷம் விஸ்தாரமாகச்சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீபாகவதத்திலும் பலராமனுடைய தீர்த்த யாத்ரையை வர்ணிக்கும்பொழுது "ஸ்ரீரங்காக்யம் மஹாபுண்யம் யத்ர ஸந்நிஹிதோ ஹரி:" என்றும், பதினோராவது ஸ்கந்தத்தில் உத்தவருக்கும் க்ருஷ்ணனுக்கும் உண்டான ஸம்வாதத்தில் இந்த அர்ச்சையினுடைய ப்ரதிஷ்டா பூஜாக்ரமங்களை விஸ்தரித்து நிரூபித்திருக்கிறது. இப்படியே மயர்வறமதி

நல மருளப்பெற்ற ஆழ்வார்களும் தங்களுக்கு அர்ச்சாவதாரமே ஆச்ரணீயமாகவும் ப்ராப்யமாகவும் அநுஸந்தித்திருக்கிறார்கள். அப்படியே நாதமுனிகள் ஆளவந்தார் ஸ்ரீபாஷ்யகாரர் முதலான ஆசார்யர்களும் அர்ச்சாவதாரமே தங்களுக்கு ஆச்ரணீயமாகவும் ஸ்ரீரங்காதி திவ்ய க்ஷேத்திரங்களில் அநேக கைங்கர்யங்களும் அவைகளுக்கு விரோதிகளாயுள்ளவைகளை பலப்ரகாரங்களாயும் நிரஸித்திருப்பதும் கண்டுகொள்க. மேலும் தனக்கு ஆச்ரயணீயராயுள்ள பரதேவதை முதலானவர்களை நேரில் ஆச்ரயிக்க ஸௌகர்யமில்லாதவரையில் அவர்களுக்கு ப்ரதிநிதியாக விக்ரஹங்களை ஏற்படுத்திக்கொண்டு அதில் ஆராதனம் முதலானதுகளைச் செய்து இஷ்டஸித்தியை அடைந்திருக்கிறார்கள். இந்தவிஷயம் த்ரோணாசார்யரை நேர ஆச்ரயிக்கமுடியாமல் த்ரோணாசார்யருடைய ஒருவிக்ரஹத்தை ஏற்படுத்திக்கொண்டு அவ்விடத்தில் குருபூஜைமுதலானதும் செய்து தனுர்வேதத்தை அப்யஸித்து நேர ஆச்ரயித்த அர்ஜுனனைக்காட்டிலும் விசேஷித்த ஸாமர்த்தியத்தை அடைந்த ஏகலவ்யனிடத்திலும் காணலாம். இவைகளன்றிக்கே விஷயாந்தரத்திலே மண்டி பகவத்விஷயத்தில் விமுகராய்ப் போகுமவர்கள் அந்த விஷயாந்தரங்களை உத்தேசித்து அவைகள் இருக்குமிடமான திவ்ய ஸ்தலங்களில் போகும்போது அங்கு ஈச்வரனுடைய விக்ரஹங்களை ஸேவித்து அதனால் விஷயாந்தரங்களில் வைராக்யம் பிறந்து பகவத்விஷயத்தில் ப்ரவணராய் ஆனார்கள் என்பதும் ப்ரஸித்தம். "[illegible]" என்கிற ப்ரமாணத்தின்படி ஒருகால் ஈச்வரனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை திருவடிமுதல் திருமுடி பர்யந்தம் ஸேவித்தால் அவர்களுக்கு ஸமஸ்தபாபமும் போகிறபடியால் அதிர்ஷ்ட விதயாவும் உபகாரமாயிருக்கும்.

மேலும் ஆச்ரயணருசி உண்டானால் அவ்விடத்தில் அந்த அர்ச்சாவதாரத்தில் சரணாகதியைச் செய்துகொள்ளலாம். அப்படி அந்தஉபாய பலமாய் ஏற்படுகிற அநுபவமும் அநுஷ்டானத்தினால் உண்டான ப்ரீதியால் செய்யப்பட்ட கைங்கர்யமும் இங்கேசெய்யும்படியாயிருப்பதால் உபேயமாகைக்கும் குறைவில்லை. மேலும் ஈச்வரனுடைய பரத்வாத்யவஸ்தைகளைக் காட்டிலும் ஸௌலப்யமும் விசேஷித்திருக்கும், அதாவது தன்னுடைய அன்னபோஜனாதி ஸர்வவ்யாபாரங்களும் ஆராதகர்களுடைய அதீனங்களாய் [illegible] திகளோபாதி அவர்களுக்கு இஷ்டவிநியோகார்ஹங்களாய்க் கொண்டு "[illegible]" என்கிறபடியே அவர்களுக்குகூற

186754

கொள்ளலாம்படி பாதந்த்ரமாயிருக்கும். இந்த அர்ச்சாவதாரத்தில் 'பிம்பாக்ருத்யா ஹ்ருதா பிம்பே ஸ்ரோத்ரு வதிஷ்டதே' என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்தபடி இந்த அர்ச்சாவிக்ரஹத்துக்கு ஸஜாதீயமான அப்ராக்ருத விக்ரஹத்துடன் நீரும்பாலும் கலந்தாற்போல் பேதத்தை க்ரஹிக்க ஒண்ணாமல் ஈச்வரன் ஸந்நிஹிதனாயிருப்பதால் இது உபாதேயமாகத் தட்டில்லை. விபவங்களில் ராமக்ருஷ்ணாதி ரூபங்கள் ப்ராக்ருத ஸஜாதீயங்களாய் இருந்தபோதிலும் அப்ராக்ருதங்களாகவே வ்யவஹரிப்பதுபோல் "தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருந்தானே" 'ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்தி:' 'மாம்ஸ மேதோஸ்தி ஸம்பவா:' என்கிற ப்ரமாணங்களின்படி இந்த விக்ரஹங்கள் ப்ராக்ருத த்ரவ்யங்களாயிருந்தபோதிலும் அப்ராக்ருதங்கள் என்றே கொள்ளவேணு மென்று சில ஆசார்யர்களுடைய திருவுள்ளம். இந்த இரண்டு பக்ஷங்களிலும் விரோதமில்லை. அர்ச்சாவதாரத்தில் நமக்கு இப்போது ஸேவைஸாதிக்கிற ப்ரகாரம் இல்லாமல் சில ஜ்ஞானிகர்களுக்கும் அவர்களுடைய விசேஷ கடாக்ஷத்துக்கு பாத்ரபூதர்காளாய் உள்ளவர்களுக்கும் விலக்ஷண ஸௌந்தர்யாவிஷ்காரம் உண்டென்றே கொள்ளவேணும். அப்படிக்கில்லாமலிருந்தால் ஸர்வலோக ஸாதாரணமாக ஸேவைஸாதிக்கும் பக்ஷத்தில் விஷயாந்தர வைராக்ய முண்டாக ப்ரஸக்தியில்லை. இந்தவிஷயம் பிள்ளையுறங்காவல்லிதாஸர் வ்ருத்தாந்தத்தில் காணலாம். அதாவது பிள்ளையுறங்காவல்லிதாஸர் பூர்வாவஸ்தையில் தன்னுடைய பார்யை வெய்யிலில் வருகிறபோது அவளுக்கு வெயில் சூடுபடாமல் தாம் நடைவாடை விரித்துக்கொண்டு வாராநிற்க, இதை ஸ்ரீபாஷ்யகாரர் கண்டருளி, இப்படிசெய்ய என்னென்று கேழ்க்க, இவளுடையகண்ழகுக்கு வெயிலின் தாபத்தால் வாட்டம்வருமென்று செய்தேனென்றுசொல்ல, இதுதனிலும் விலக்ஷணமான கண்ணழகை பார்ப்பீர்வாருமென்று அவரை அழைத்துக்கொண்டுபோய், பெரியபெருமாளுடைய திருக்கண்களை ஸேவிக்கபண்ணிவிக்க அதுமுதல் அவர் விஷயாந்தர வைராக்ய முள்ளவராய் பகவத்விஷயத்தில் பரிவுடையராய் இருந்தாரென்று ப்ரஸித்தம் அதுவுமன்றி மணக்கால்நம்பி ஆளவந்தார் ராஜ்யபரிபாலனம் பண்ணிக்கொண்டிருக்கிற காலத்தில் அவரை அனுஸரித்து தன்னிடத்தில் ஆபிமுக்யம் உண்டாகும்படிசெய்து அவருக்கு பெரியபெருமாளை ஸேவைஸாதிக்கும்படி செய்தபிறகு, அவர் ராஜ்யத்தைவிட்டு துரீயாச்ரமத்தை பரிக்ரஹித்தாரென்பதும் கண்டுகொள்க. ஆழ்வான் பட்டர்முதலானவர்களும் வரதராஜஸ்தவம் ரங்கராஜஸ்தவம் முதலான கிரந்தங்களிலும் பெருமாளுடைய திவ்யமங்கள விக்ரஹத்தை வர்ணித்திருப்பது அதிசயோக்தி அன்று பகவத்

விஷயத்தில் வஸ்துஸ்திதியை நிரூபிக்கும் ப்ரகாரமே ஒழிய அதிசயோக்தி என்பது கிடையாது. இந்த விஷயமும் "அந்யத்ர தத்குணோக்தி: ஸ்துதி," என்று பகவத்விஷயம் தவிர வேறு இடங்களில் இல்லாத குணங்களை சொல்லுவது ஸ்துதியென்றும், பகவத்விஷயத்தில் உள்ள குணங்களைச்சொல்வது ஸ்துதியென்றும் அருளிச்செய்திருக்கிறார். தொண்டரடிப்பொடி ஆழ்வாரும் 'போதரே என்றுசொல்லி புந்தியில் புகுந்து தன் பாலாதரம் பெருகவைத்த அழகன்' என்று அருளிச்செய்திருக்கிறார். ஸ்ரீவசன பூஷணத்தில் சிலர்க்கு அழகாலே பிறக்கும் என்கிற ஸ்ரீஸூக்தியினுடைய வ்யாக்யானவஸரத்தில் அர்ச்சையில் காதாசித்கமாக திவ்யமங்களவிக்ரஹ ஸாக்ஷாத்காரம் வந்தவர்களென்று, மணவாளமாமுனிகள் அருளிச்செய்த வ்யாக்யானவஸரத்தில் அர்ச்சையில் காதாசித்கமாக என்று இருப்பதால் ஒருகாலவிசேஷத்தில் விலக்ஷண ஸௌந்தர்ய ஆவிஷ்காரம் ஏற்படுமென்பது வ்யக்தம். "விசுத்தவாஸ்யெசேஷஸ்ய தாமைவ ப்ரஹ்மாவிணீம்" என்கிற ப்ரமாணத்தின்படி அர்ச்சாவதார உபாஸ்தி பண்ணுகிறவர்களுக்கு அந்த அர்ச்சாவதார அநுபவமே ஏற்படுகிறது என்றிருக்கிறது. இந்தவிஷயம் திருப்பாணாழ்வார் முதலானவர்களிடத்தில் காணலாம். அன்றியும் ஸ்ரீஹஸ்திகிரியில் பேரருளாளப்பெருமாள் திருக்கச்சிநம்பியுடன் அர்ச்சாஸமாதி குலைந்து ஸல்லாபம் பண்ணிக்கொண்டிருந்ததும் கண்டுகொள்க. இப்படி அர்ச்சாவதாரத்தில் மெய்ப்பாட்டை அநுஸந்தித்து 'நெஞ்சினால் நினைப்பான் யாவன் அவனாகும் நீள் கடல்வண்ணனே' என்று ஆழ்வார் அருளிச்செய்தார். அதற்கு அர்த்தம் தன்னுடைய நெஞ்சாலே ஸ்வர்ண ரஜதாதி த்ரவ்யங்களாலே விக்ரஹங்களை எழுந்தருளப்பண்ணி அந்த விக்ரஹங்களில் ஸதாஸந்நிஹிதனாய்க்கொண்டு ஸேவை ஸாதிக்கவேணுமென்று அபேக்ஷித்தால் அந்த விக்ரஹத்தையே தனக்கு அஸாதாரண விக்ரஹமாகக்கொண்டு எழுந்தருளியிருக்கிறவன்தான் நித்யவிபூதியில் அப்ராக்ருத விக்ரஹத்தோடே எழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரன் என்று அர்ச்சாரூபியான எம்பெருமானுக்கு நித்யவிபூதி சேஷமென்று அருளிச்செய்தார். 'ப்ரதிமாஸு' என்று ருஷிகள் அசேதனமாக சொல்லாநிற்க ஆழ்வார் அர்ச்சாரூபியான எம்பெருமானை நெஞ்சினால் நினைக்கப்பட்டவன் எவன் அவனை ஸர்வேச்வரனாகவே அத்யவஸித்து அருளிச்செய்ததும் கண்டுகொள்க. இப்படி அர்ச்சாவதாரமே ஸர்வஸுலபமாயும் ஸர்வ அபேக்ஷித ப்ரதமாயும் இருப்பதால் இதுவே ஆச்ரணீயமென்று ஆழ்வார்களும் ஆசா

ர்யர்களும் போரவிரும்பியிருப்பார்கள். ஆதலால் இப்போது சேதனர்க
ளாயுள்ளவர்கள் ஸ்வயம் வ்யக்தம் முதலான திவ்யதேசங்களிலும் அது
தவிர மானுஷமாய் ஏற்பட்ட ஸ்தலங்களிலும் தன்னுடைய க்ரஹங்களில் ஏற்
பட்ட அர்ச்சைகளிலும் தங்கள் தங்கள் அதிகாரானுகுணமாக ஆச்ரயித்
தும் அநேக ப்ரகாரங்களான கைங்கர்யங்களைச் செய்தும் இருக்கவேண்டி
யது ப்ராப்தம். இப்படி அர்ச்சாவ்தாரத்தினுடைய பெருமை யதாமதி
நிரூபிக்கப்பட்டது.

கடிதம்.

போ! தீபிகாபிமானிகளான ஸ்ரீவைஷ்ணவ சிரோமணிகளே! ஸ்ரீபெரும்பூதூர் ஆதி
கேசவப்பெருமாள் ஸ்ரீபாஷ்யகாரஸ்வாமி தேவஸ்தானம் பரம்பராபட்டாசாரியரான அடி
யேனும் என்னைச்சேர்ந்த மற்ற வைகாநஸரும் பரம்பரையாய் "பாஹ்யதப்த சக்ராங்
கனம்" அதாவது வெளியில் தோள்களில் தப்தமான சங்கசக்ரங்களால் ஸமாச்ரய
ணம் செய்துகொண்டு வருகிறோம் என்பது ஸகலருமறிந்த விஷயமே. சிலகாலத்
திற்கு முன்பு சக்ராங்கன அக்ஷகரான சில வைகாநஸரை நாங்கள் வகைபறு பந்துகோஷ்
யில் சேர்க்காமல் பங்க்திபோஜநத்தில் விலக்கியிருந்தோம். இப்பொழுது சமீபத்தில்
விலக்கப்பட்டவர்களின் தீனப்ரார்த்தனையின் பேரில் எங்களில் ஒருவரான சக்ராங்கித
ரான கரியம்பாக்கம் மணவாளபட்டாசாரியருடைய க்ருஹத்தில் நடந்த ப்ரஸ்துதத்தில்
ஸேவிலிதபிவந்த அவர்களிடம் கிருபைசெய்து, சக்ராங்கிதராய் சேர்த்துகொண்டு இனி
வைகாநஸர் வராவண்ணம் சம்மதித்தோம். இப்படியிருக்க எவரோ எம்குல மறியா
ஒரு ண்டபேபரிலும் நாங்கள் ப்ராயச்சித்தம் செய்ததாகப் பெசி எழுதியதைக் கண்
டிக் ஜ்நடந்த உண்மையை இவ்விதம் வெளிக்காட்டினேன். வைஷ்ணவ லக்ஷண
மாய், சாஸ்த்ர ஸித்தமாய், விகநஸ ப்ருகு, மரீசிமுதலான வைகாநஸர்
களால் பரம்பரையாய் அநுஷ்டித்துவந்த இந்த பாஹ்யதப்த சக்ராங்கநத்திற்கு
ப்ராயச்சித்த மென்பது ஸ்வப்நத்திலும் காணலாகாது. அப்படிமுன்னோர் ஆசாரமும்
சாஸ்த்ரமும் அறியாதமூடரே ப்ராயச்சித்தம்செய்து கொள்ளவேண்டும். மேலும்
ஸ்ரீஉடையவர் சந்நிதி அர்ச்சகாதி கைங்கர்யபரரான எங்களுக்கு இந்த ப்ரஸக்திக்கு
அவகாசமே இல்லை என்பதை விவேகிகள் கண்டுகொள்வது.

ஸ்ரீ பாஷ்யகார ஸ்வாமி தேவஸ்தானம் ஸ்ரீபெரும்பூதூர்.

ஸ்தானம் பாஷ்யபட்டாசாரியர்.

ஸ்ரீ:

உபவாஸத்தின்குணம்.

(ஸ்ரீ உப. கே. ராஜகோபாலாசார்யர், B. A., B. L.)

நம்முடைய முன்னோர்கள் உபவாஸத்தை சுத்தப்பட்டினி என்றும்
ஏகவார போஜனமென்றும் இருவிதமாகப் பிரித்திருக்கிறார்கள். ஏகாதசி
திதியிலும் ச்ரவணத்வாதசியிலும் முழுவதும் உபவாஸமிருக்கவேண்டும்.
ஏகாதசி ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய திதியாதலாலும் ச்ரவணம் பெருமா
ளுடைய நக்ஷத்ரமாதலாலும் இந்த இரண்டுதினங்களிலும் சுத்தஉபவாஸம்
சுத்தசத்வகுணத்தை உண்டுபண்ணுகிறது என்று நம் முன்னோர்க
ளுடைய கொள்கை. இரண்டாவது பிரிவில் அஷ்டமி கார்த்திகை அமா
வாஸ்யை, பௌர்ணமி இந்த தினங்களில் பகலில் ஏகவாரபோஜனம் செய்து
ராத்ரி ஆஹாரமில்லாமலிருக்கவேண்டும். தசமி அன்று ஏகாதசி உபவா
ஸத்துக்கு அங்கமாக பகலில் ஒருவேளைதான் ஆஹாரம் செய்யவேண்டும்.
சிலர் அஷ்டமி அமாவாஸ்யை பூர்ணிமாவில் இரவில் பலஹாரம் செய்ய
லாம் என்று சொல்லுவது ஸரியல்ல. சுத்தமாக ஆஹாரம் செய்யக்
கூடாது.

நாம் மிதமில்லாமலும், வர்ஜாவர்ஜமில்லாமலும் கண்டவஸ்துக்களை
ஸாப்பிடுவதால் தேஹத்துக்கு அனுகூலமில்லாத அநேக பதார்த்தங்கள்
(மேதஸ்) கொழுப்பு முதலியரூபமாய் தேஹத்தில் பரிணமிக்கின்றன. இதை
தேஹத்துக்கு இருக்கவேண்டிய அளவு வைத்து அதிகத்தை வெளிப்படுத்த
உபவாஸம் ஏற்பட்டது. உபவாஸதினம் அதிகமான மேதஸ் (கொழுப்பு)
தேஹத்தால் உபயோகப்படுத்தப்பட்டு எறிக்கப்பட்டு விடுகிறது. இவ்
விதம் மேதஸ் (கொழுப்பு) தேஹத்தைவிட்டு விலக்கப்பட்டவுடன்,
மூளைசுத்தமாய் ஸத்வகுணமுள்ளதாக ஆகிறது. ஸத்வகுணம் அதிகரித்
தால் புத்திக்கு விகாஸம்உண்டாகிறது. புத்திவிகஸிக்கும்பொழுது தத்வப்
ரகாசம் உண்டாகிறது. இதனால் சிந்தனைசக்தி உண்டாகிறது. இதை
இவ்வுலகத்திலேயே அனுபவத்தில் பார்க்கலாம். இது இவ்வுலகத்தி
லேயே நம்வாழ்க்கை நாளில் நமக்கே உபயோகமாகிறது. இதை உபவாஸ
மிருந்து அப்யாஸம்செய்பவர் அனுபவத்தில் அறிவார்கள்.

உபவாஸமிருந்து மறுநாள் பகலில் தூங்கக்கூடாது. அப்படித்தூங்
கினால் தேஹத்தில் உபவாஸத்தினால் நீக்கப்பட்டது போக பாக்கி இருக்
கும் மேதஸ் முதலான மலம் அப்படியே தேஹத்தில் தங்கிவிடும். விழித்
துக்கொண்டிருந்தால் அவயவங்கள் வேலைசெய்து அழுக்குகள் எறிக்கப்

பட்டுவிடுகின்றன. ஸாதாரணமாய் பகலிலேயே தூங்கக்கூடாது. இது
ஆயுஸ்ஸுக்கு குறைவை உண்டுபண்ணுகிறது. உபவாஸத்துக்கு மறுநாள்
பகலில் தூங்கவே கூடாது.

எவ்விதம் பர்வங்களில் ஸமுத்ரத்தில் அலை வ்ருத்தியை அடைந்து
குறைவை அடைகிறதோ அதுபோலவே நம்முடைய சரீரத்திலிருக்கும்
சாரீரக தாது வ்ருத்தியையும் க்ஷீணத்தையும் அடைகிறது. இதைத்தான்
டாக்டர்கள் மெடபாலிஸம் (Metabolism) என்று சொல்லுகிறார்கள். மனித
னுக்கு இது ஏகாதசிதினம் வ்ருத்தி அடைகிறது. குழந்தைகளுக்கு
மாந்தம் குலேப்பு, தெற்கத்திக்கணைமுதலிய வ்யாதிகள் தசமி ராத்திரி
வ்ருத்தி அடைய ஆரம்பித்து ஏகாதசி தினம் ஜாஸ்தி ஆவது வழக்கம். இதற்
காகதான் ஸம்ப்ரதாயம் தெரிந்த வைத்தியர்கள் தசமிதினம் பேதிக்குக்
கொடுப்பதுவழக்கம். தேஹத்திலுண்டான சாரீரகதாதுவை கழிக்கும்பொ
ருட்டு உபவாஸம் விதிக்கப்பட்டது. இதை ஜனங்கள் அனுஷ்டிக்கக்கஷ்
டப்படுவார்கள், என்று நினைத்து ஸம்ப்ரதாயம் தெரிந்த வைத்யர்கள் மாதம்
ஒருமுறை விரேசனத்தையும் பக்ஷத்தில் ஒருமுறை வமனத்தையும் விதித்
திருக்கிறார்கள். ஸூக்ஷ்மமாக நிதானித்துப்பார்த்தால் ஏகாதசி அன்று
ஆஹாரத்துக்கே தேவை இராது. இது உபவாஸமிருந்து அப்யாஸமுள்
ளவர்களுக்கு அனுபவத்தில் தெரியும்.

ஆஹாரம் உட்கொண்ட பிறகு அது மாம்ஸாதிதாதுக்களாக பரிணமிக்கி
றது. மயிர், புரீஷம் இவைகளுக்கு வர்ணம் உள்ள வஸ்து அவச்யமாக இருக்கி
றது. இதற்காகவும் பித்தப்பையயின் வேலையை சுருசுருப்பாய் நடத்தவும்
நாம் காய்கறிகள் பச்சிலேகள் முதலியவைகளை உட்கொள்ளவேண்டும். காய்க
றிகளிலிருக்கும் வர்ணமானது மயிர் முதலியது வளருவதற்கு ஸாதனமாகி
றது. குழந்தைகளுக்கு இதற்காகத்தான் கோரோசனை உபயோகப்படுத்த
வேண்டும். இவ்விதம் நாம் உட்கொள்ளும் பதார்த்தங்களிலிருந்து மேற்கூ
றிய குணங்களெல்லாம் சில ஒருவாரத்திலும் சில ஒருபக்ஷத்திலும் வ்ருத்
தி அடைந்து விடுகின்றன. இதில் வ்ருத்தி பண்ணவேண்டிய
அம்சத்தை வ்ருத்திபண்ணியும், குறைக்கவேண்டிய அம்சத்தை குறை
த்தும், ஸமமாகபண்ணிவைக்கவேண்டும். இதை நம் சரீரத்திலிருக்கும்
ப்ளேண்டு க்ளாண்டுகள் (Blind glands) இந்த வேலையை ஸரிவரச் செய்து
வருகின்றன என்றுநம்பிக்கை. இந்த க்ளாண்டுகளை வரவரவ்ருத்தி அடை
யச்செய்வது நம்முடைய சரீரஸௌக்யத்துக்கும் ஆயுஸ்வ்ருத்திக்கும் கார
ணம். இதுகள் பட்டினியாயிருக்கும் காலத்தில் வ்ருத்தியடைகின்றன. பட்
டினியாயில்லாமல் காபி டீ சாப்பிடுவதால் பூரிக்கிறதில்லே. நம்முடைய
அனுபவத்திலும் பார்க்கலாம். ஸாதாரணமாய் தாகமும் வரக்ஷியும்

ருக்கிற தினத்தில் ஜலம் ஜாஸ்தியாய் உட்கொள்ளவேண்டியிருக்கிறது. உப
வாஸதினங்களில் வரக்ஷி தாஹமே இருக்கிறதில்லே. நிலே நரம்புகளின் உஷ்
ணம் வெளிப்படுகிறதில்லே-நீர் ரோகத்திலிருந்து கஷ்டப்படுகிறவர்கள் ஸா
தாரணதினத்தில் வரக்ஷியால் அளவுக்குமிஞ்ஜின ஜலத்தை ஸாப்படுகிறார்
கள். உபவாஸமிருந்தால் அன்று வரக்ஷியிராது. ஏன் என்றால் ப்ளேண்டு
க்ளாண்டுகள் தாங்கள் பூரிப்பதினால் வரக்ஷியை நிறுத்திவிடுகின்றன. இத
னால் ஆயுஸ்ஸும் வ்ருத்தியாகும்.

ம்ருகங்கள்கூட ஏகவாரபோஜனம் வைத்துக்கொண்டிருக்கின்றன.
இதற்கு ஸாக்ஷி நாயே. அது ஒருதினத்தை ஒருவேளை ஆஹாரம் செய்வ
தாக வைத்துக்கொள்ளுகிறது. பெரும்பாலும் வெள்ளி, சனி ஞாயர், இந்த
தினங்களேயே வைத்துக்கொள்ளுகிறது. ஒருதடவை தன்னால் வைத்துக்
கொள்ளப்பட்ட தினத்தையே அடுத்தவாரத்திலும் வைத்துக் கொள்ளு
கிறது. இதற்கு இந்தமாதிரி புத்தி உண்டாகியிருப்பது இயற்கை (Instinct)
தான். மல்லுக்கட்டி ஆஹாரத்தைக் கொடுத்தாலும் அருகம்புல்லே தின்னு
வாயிலெடுத்துவிடும். பகலில் ஆஹாரம் எடுக்காமல் ராத்திரிதான் சாப்
பிடும். இதை வாரத்துக்கு ஒருமுறை அனுஷ்டித்து வருகிறது. அப்படி
மிருகங்களே செய்யும்பொழுது மனுஷ்யன் அன்னியாயமாய் செய்யாமலிருக்
கிறான்.

வாதவிசேஷங்கள் (Blind glands) ஆயுஸ்வ்ருத்திக்குக் காரணமாகஇரு
க்கின்றன, என்று டாக்டர்கள் இப்பொழுதுகண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த
க்ளாண்டுகளின் விருத்திக்காக இஞ்ஜக்ஷன் செய்வதால் அவைகள் வ்ருத்தி
யை அடைந்து நம் ஆயுஸ்ஸை வ்ருத்திபண்ணுகின்றன என்றுகண்டுபிடித்தி
ருக்கிறார்கள். இவைகளின் வ்ருத்தி ஸுலபமாய் உபவாஸத்தினால் அடை
யும்படி இருக்கும்பொழுது, ஏன் அனாவச்யமாய் வேறு பதார்த்தங்களே
நம் சரீரத்துக்குள் சேரும்படி இஞ்சக்ஷன் செய்துகொள்ளவேண்டும்.
இந்த க்ளாண்டுகள் ஆயுஸ்ஸை வ்ருத்திபண்ணுகின்றன என்பதையும், உப
வாஸம் இந்த க்ளாண்டுகளே வ்ருத்தி செய்கிறதுஎன்றதத்வம் தெரியாமல்
ஜனங்கள் சதமானமில்லாமல் அல்ப்பாயுஸ்ஸுக்களாக ஆய்விடுகிறார்கள்.

ஆகையால் உபவாஸம் ச்ரேஷ்டம். ஏகவாரபோஜனம் மத்யமம்.
மிதாசிகள் எவ்வளவு ஸுகிகளாகவும் ரோகமில்லாமலுமிருக்கிறார்கள். ஆகை
யால் சாஸ்திரீயமாயும், ஆயுஸ்வ்ருத்தியை கொடுக்கக்கூடியதாயும், மதஸ
ம்மதமான ஸ்ரீ நமக்கு உபவாஸத்தால் உண்டாகிறது. இப்படிப்பட்ட
உபவாஸத்தை டாக்டர்கள் தற்காலம் மதுமேகம் முதலான சில வ்யாதிக
ளுக்கு சிகித்ஸையாக அனுஷ்டிக்கச் சொல்லுகிறார்கள்.

இதின் தத்வம் நன்றாக உணர்ந்த திருவள்ளுவநாயனாரின் ஆரோக்ய தசகத்தை நம்மவர்கள் பார்த்துப் படித்து அனுஷ்டித்து வருவாராயின் ரோகங்களுக்கே இடமிராது. ஆஹாரநியமத்தில் நம் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்திருக்கும் உபவாஸமகிமையையும் உணவுகளின் வர்ஜாவர்ஜங்களையும் பற்றி இன்னொரு ப்ரஸக்தியில் எழுதுவோம்.

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம்.

(ஸ்ரீ. உப. வே. தட்டை ஸ்ரீநிவாஸாசார்யர்.)

